# இயல் மூன்று

# தமிழ்ப்பெண் கவிஞர் படைப்புகளில் பெண்ணியம்

## முன்னுரை

பெண்ணின் மீது அதிக அக்கறை கொண்ட இலக்கியக்கோட்பாடுகளுள் ஒன்று 'பெண்ணியம்'. இக் கோட்பாடு பிரெஞ்சு நாட்டிலிருந்து ஏனைய பகுதிகளுக்குப் பரவியதெனலாம். பெண்ணியம் என்ற சொல் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லினின்று நேரடியாக உருவாக்கப்பட்ட சொல். 18- ஆம் நூற்றாண்டில் உருவான பெண்ணியக் கோட்பாடு இந்தியாவில், சிறப்பாகத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றது. இத்தகைய பெண்ணியச் சிந்தனை, தமிழ்ப் புதுக்கவிதைகளில்- பெண் கவிஞர் படைப்புகளில் இடம் பெற்றிருக்கும் பாங்கினைப்பற்றி இவ் இயல் எடுத்துரைக்கின்றது.

## பெண்ணியம்

உலகப்புதுமைகளின் முன்னோடியாகத் திகழும் பிரெஞ்சு நாட்டிலிருந்து தோன்றிய பெண்ணியம் என்ற கருத்துருவும் சொல்லாக்கமும் பெண்களை எழுச்சி பெறத்தூண்டுவனவாகும். பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளையும் அடக்கும் வழிகளையும் அறிந்து கொண்டு, அவற்றினின்று பெண்கள் விடுபடுவதற்கான வழிமுறைகள் பற்றியவற்றைப் பெண்களுக்கு அடையாளங் காட்டுவதாகும். குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல், மதம், பண்பாடு ஆகிய நிலைகளில் பெண்கள் மீது இழைக்கப்படும் ஒடுக்கு முறைகளின்று அவர்களை விடுதலை பெறத் தூண்டுவதற்காகப் பெண்ணியம் அமைகிறது. பெண்ணின் பிறப்பிலிருந்து தொடங்கி இறக்கும் வரையிலும் எல்லாப்படி நிலைகளிலும் உரிமையற்ற சார்ப்புப் பொருளாகவே பெண்களை ஆண் சமுதாயம் கருதுகிறது. ஆணாதிக்கச் செயல்களினால் அவ்வினம் பல தருணங்களில் ஊமையன் கண்ட கனவாகவும் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போன்றும் அவர்தம் வாழ்நாள்கள் வீணாட்களாகக் கழிந்து கரைவதும் உண்டு. இத்தைகய செயல் இறுக்கங்களை நேரடியாக உணர்ந்தும், அனுபவித்தும் கேள்வி வாயிலாக அறிந்தும் சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வுரைக்கும் பெற்றிமை வாய்ந்த கவிஞர்கள் தம் இலக்கியப் படைப்புகளில் சிறப்பாகக் கவிதைகளில் எவ்வகையிலான பெண்ணியச் சிந்தனையின் தாக்கங்களுக்கு ஆட்பட்டிருக்கின்றனர் என்பதை விரிவாக அறிய முற்படுவது இன்றியமையாததாகும்.

## பெண்ணிய வகைப்பாடுகள்

பெண்ணியக் கோட்பாடுகள் நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் மாறுபடுகின்றன. மேலைநாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் வெவ்வேறு வகையாகப் பெண்ணியக் கோட்பாடுகள் வழக்கில் உள்ளன. இந்தியாவில் பெண்ணினத்தவர் மேல்தட்டு , கீழ்தட்டு, மத்திய வர்க்கம் ஆகிய நிலைகளில் பகுக்கப்பட்டு மாறுபட்ட கோட்பாடுகளைக் கொண்டுள்ளதைக்

காணலாம். இவையனைத்தையும் மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism), சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism), இந்தியப் பெண்ணியம் (Indian Feminism) என்ற வகைகளில் பெண்ணியக் கோட்பாடுகளை வகைப்படுத்தலாம். மார்க்சிய வழியிலான பெண்ணியக் கோட்பாட்டுப் பிரிவும் உண்டு. இவற்றைப் பற்றி மிகச் சுருக்கமாகப் பின்வரும் வரையறைகள் மூலம் அறியலாம்.

## மிதவாதப் பெண்ணியம்

ஆணும் `பெண்ணும் சமம்; 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்பதை முன்னிருத்தி உருவானதுதான் மிதவாதப் பெண்ணியம். ஆண், பெண் வேறுபாடுகளை அதாவது உயர்வு தாழ்வு வேறுபாடுகளைக் களைய முற்படுவதே இக் கோட்பாடாகும். "பெண்ணை, வீட்டை விட்டு வெளியே வா' என்று இவ்வகைப் பெண்ணியம் கூறவில்லை. மாறாக, ஆண்,பெண் உறவாடும் குடும்ப அமைப்பை இது வரவேற்கிறது. ஆனால், அக்குடும்ப அமைப்பில் பெண்ணை, 'அடிமையாக இராதே,' 'சம அந்தஸ்தைப் பெறு' என்று வற்புறுத்துகிறது. குடும்ப நிலையில் சுய சிந்தனை, சுயமுடிவெடுப்பு, சுய தேர்வு இவற்றைப்பெற்று, பரஸ்பர மரியாதையுடன் தனித்துவம் உடையவளாகப் பெண் செயல்பட வற்புறுத்துகிறது" என்ற கூற்று மிதவாதப் பெண்ணியத்தைத் தெளிவாக வரையறுக்கின்றது[1]. இம் மிதவாதப் பெண்ணியத்தில் குறைபாடு இருப்பதாகப் பெண்ணியல் ஆய்வாளர் குறிப்பிடுவர். "பெண் இனத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஆணாதிக்க மதிப்புகளை எதிர்ப்பதற்குப் பதிலாக அவற்றை ஒப்புக்கொள்கின்றது. அதனால் பெண்களின் தாழ்மை பற்றிய சரியான விளக்கங்களைக் கொடுக்கத்தவறிவிட்டது" என்பது இக் கோட்பாட்டின் குறைபாடாகக் கூறப்படுகிறது[2] . இருப்பினும் ஆணுக்கு நிகராகப் பெண்ணை மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உரத்த குரல் எழுப்புவதே மிதவாதப் பெண்ணியத்தின் நோக்கமாகும்.

## தீவிரவாதப் பெண்ணியம்

தீவிரவாதப் பெண்ணியத்தைத் தூய பெண்ணியம், நவீன பெண்ணியம் (New feminism) என்றும் இது குறிக்கப்படுகிறது. இது பாலியலை அடிப்படையாக் கொண்ட புரட்சிகரமான கோட்பாடாகும். பெண் அடிமையாவதற்குக் காரணம் உடலியற் கூறே என்பது இக்கோட்பாட்டின் அடிக்கருத்து. அதனால் பாலியல் தொடர்பான ஒடுக்கு முறையை இக் கோட்பாடு எதிர்க்கிறது. கருத்தரித்தல், குழந்தைப்பேறு ஆகியவற்றிற்கு மூல காரணமான திருமணம், குடும்பம் ஆகிய கட்டமைப்புகளை இது சிதைக்க முற்படுகிறது. "திருமணம் மற்றும் குடும்ப அமைப்பிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆணிடமிருந்து சுகத்தைப் பெறுதல் என்ற நிலையை ஒழித்து அவரவராகவே தமது தேவையைப் பூர்த்தி செய்தல் என்கிற

---

[1] .டாக்டர். இரா.பிரேமா ,பெண்ணியம் -அணுகுமுறைகள் ப.20

[2] .முனைவர் ச.முத்துச்சிதம்பரம்,பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் ப.81

நிலைக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள வேண்டும். நேரடி உற்பத்தி உறவில் ஈடுபட வேண்டும். இனப்பெருக்கத்திற்கான தேவை ஏற்படும்போது மட்டுமே யோனி வழியிலான உடலுறவை மேற்கொள்ள வேண்டும். ஓரினப் புணர்ச்சி, யோனி தவிர்த்த கூட்டுப் புணர்ச்சி, சல்லாபம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒழுக்கவியல் கருத்தாக்கங்களை மறுதலித்து மீற வேண்டும். மரபுவழியான உணவு முறையைத் தவிர்த்து எளிய தயாரிப்புள்ள உணவுகளை மேற்கொள்வதோடு உணவுத்தயாரிப்பு இருபாலருக்குமான செயலாக்க வேண்டும். கருக்கலைப்பைச் சாதாரணச் சமூக நிகழ்வாக்க வேண்டும். ஆதிக்க நிறுவனங்களுடனான அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ள வேண்டும்." என்ற பெண்ணியல் ஆய்வாளர் மாலதியின் கூற்று தீவிரவாதப் பெண்ணியக் கோட்பாட்டைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது[3]. பாலியல் ரீதியிலான அடக்குமுறையை எதிர்த்துப் போராடும் இக் கோட்பாட்டின் அணுகுமுறை அனைத்துத் தரப்பு மக்களால் போற்றப்படுகிறது எனக் கூறுவதற்கில்லை. ஆண்கள், பெண்களின் எதிரிகள் என்ற கருத்தை இக்கோட்பாடு வெளிப்படுத்துகின்றது.

## சமதர்மப் பெண்ணியம்

சமதர்மப் பெண்ணியத்தை சோஷலிசப் பெண்ணியம் என்றும் இதனை அழைப்பர். பெண்களுக்குரிய வேலை ஆண்களுக்குரிய , வேலை என்று பாகுபடுத்துவதை இக் கோட்பாடு எதிர்க்கிறது. குழந்தை வளர்ப்பு வீட்டு வேலை முதலானவை பெண்களுக்கு மட்டும் உரியதன்று; ஆண்களும் அதில் பங்கு பெற வேண்டும். பெண்கள் இல்லத்தில் செய்கின்ற வேலை, ஆண்கள் வெளியில் செய்கின்ற வேலைக்கு இணையானது. ஆனால், பெண்களின் வேலைக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஆண்கள் ஆதிக்கவாதிகளாகவும், முதலாளித்துவ நிலையிலும் இருப்பதால் பெண்ணை அடிமையாக்க முடிகிறது. எனவே, ஆணாதிக்கத்தையும் முதலாளித்துவத்தையும் சமதர்மப் பெண்ணியம் எதிர்க்கிறது.

## இந்தியப் பெண்ணியம்

இந்தியாவில் பெண்ணியம் என்பது சமூக சீர்திருத்தம், பெண்கல்வி, பெண்விடுதலை, ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்துகளின் அடிப்படையில் தோன்றி வளர்ந்தது எனலாம். ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், பண்டித ரமாபாய் போன்ற சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர்களால் சதி ஒழிப்பு, குழந்தை மண எதிர்ப்பு , விதவை மறுமணம், தேவதாசிமுறை ஒழிப்பு, பெண் கல்வி, போன்றவை பெண் விடுதலைக்காகப் பேசப்பட்டன. பெண்களுக்காகப் போராட்ட குணத்துடன் போராடினர்; சிலவற்றில் வெற்றி பெற்றனர். பின்னர் காந்தியடிகள், பாரதியார், திரு.வி.க.,மாயூரம் வேதநாயகம்பிள்ளை, பாரதிதாசன், பெரியார், பூலே

[3] .மாலதி, பெண்ணியம் கூட்டுவிவாதம், அரசு-குடும்பம்-பெண்ணியம் ப.79

போன்றவர்கள் பெண் விடுதலைக்காக உரத்த குரலெழுப்பினர். பெண் விடுதலை, பெண்ணுரிமைக்காக அமைப்புகளும் இயக்கங்களும் உருவாயின.

இவ்வாறு வளர்ந்த பெண்விடுதலை, பெண்ணுரிமை, பெண்கல்வி பற்றிய கருத்துச் சிந்தனைகள் இந்தியச் சூழலுக்கு ஏற்ப செயற்படுவதை இந்தியப் பெண்ணியம் எனலாம். இந்தியப் பெண்ணியம் குடும்பத்தைச் சிதைக்காமல் ஏற்றுக் கொள்கிறது. மரபுகளை உடைக்க முற்படுகிறது. பெண் என்பவள் ஆணுக்கு அடங்கி நிற்பவள், சமையல் முதலான வீட்டு வேலைகள் பெண்ணுக்கு மட்டுமே உரியது ; சுயசிந்தனையோ, கருத்தோ இருக்கக்கூடாது என்ற கருத்தாக்கங்களை முற்றிலுமாக அடியோடு மாற்ற முற்படுவது இந்தியப் பெண்ணியம் ஆகும். "பெண் மெல்லியள். வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் " என்ற கருத்தாக்கத்தை தங்கள் பெண்களின் மேல் விலங்காகப் பூட்டியுள்ளனர் இந்திய ஆண்கள். அதை உடைத்தெறிந்துவிட்டு, பெண்களை அடிமையாகப் பார்க்கும் ஆணாதிக்கப் பார்வையை மாற்றி, அவர்களை 'சக மனுசியாகப்' பார்க்கும் பார்வையைச் சமுதாயத்தில் ஏற்படுத்தி வருகிறது இந்தியப் பெண்ணியம். மேலும், பெண்ணை தன் வாழ்வு என்றும் தன் இலக்கு என்றும் சுயமாகச் சிந்தித்துச் செயல்பட நிஜத்தை எதிர்கொள்ள விழிப்பூட்டி வருகிறது. 'தனி மனித உரிமை'யை நிலைநாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது இந்தியப்பெண்ணியம்." என்ற கருத்து இந்தியப் பெண்ணியத்தைத் தெளிவாக வரையறுக்கின்றது[4]. பெண்ணை ஆணுக்கு நிகராக ஏற்காத மரபுப் போக்கை உடைப்பதுதான் இந்தியப் பெண்ணியம் எனலாம். இதற்குச் சான்றாக குழந்தையின் பெயருக்கு முன் உள்ள தலைப்பெழுத்தைக் கூறலாம். தாயின் பெயரே முதன்மையாக இடம்பெற வேண்டும் ; தந்தையின் பெயர் மட்டும் இடம்பெறுதல் போதும் என்ற மரபை மாற்ற முயலுவது இந்தியப் பெண்ணியம்.

## மார்க்சியப் பெண்ணியம்

மார்க்சியப் பெண்ணியம் மார்க்சிய கருத்துக்களினடிப்படையில் உருவானதாகும். பொருளாதார, வர்க்கப் பாகுபாடுகளே பெண்களை அடிமையாக்குகின்றன. ஆணும் பெண்ணும் சமம் என்பதை நிலைநாட்ட சட்டத்தின் உதவி முதன்மையானது. சட்டத்தின் மூலமாக தனிநபர் சொத்துரிமையைப் பொதுமைப் படுத்துவதன் மூலம் பெண், ஆணுக்கு நிகராகக் கருதப்படுவாள்; பணிகளும் பொதுவானதாக அமையும் என்பதை வலியுறுத்துவதுதான் மார்க்சியப் பெண்ணியம் எனலாம். மார்க்சியப் பெண்ணியம், பொதுவாக மார்க்சிய சித்தாந்தங்களை முன்வைத்துப் பேசுவதாகும். இவ்வகையான பிரிவுகள் அல்லாமல் மேலும் சில பிரிவுகளும் உண்டு. உடற்கூறு , உளவியல், மொழி, பண்பாடு என்ற

[4] .டாக்டர்.இரா. பிரேமா, மு.கு.நூ.ப.24

நான்கு பிரிவுகளின் அடிப்படையில் பெண்ணியக் கோட்பாடுகள் செயல்படுவதை ஷோவால்டர் விவரித்துக் கூறுகிறார்[5].

## உடல்கூறு சார்ந்த பெண்ணியம்

உடல் கூறு சார்ந்த பெண்ணியம் பெண்ணின் உடல் அமைப்புடன் படைப்பினைத் தொடர்புபடுத்திக் கூறுவதாகும். ஆண் பெண் உடல் வேறுபாடு படைப்பின் வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமையும் என்பதைக் கூறுகிறது. "பெண்ணின் படைப்பில் பெண்ணின் சிறப்புக்கூறுகள் பெறும் இடம், உடலின் செயல்பாடுகள் பற்றிய புனைவுரைகள் பெறும் இடம், உவமை உருவகங்களாக உடல் உறுப்புகள் பெறும் இடம் ஆகியனவற்றை அறிந்து அது ஆண்களின் சித்திரிப்பினின்று என்னென்ன விதங்களில் மாறுபடுகிறது என்பதைக் கண்டுரைப்பதாக உடற்கூற்றுத் திறனாய்வு அமைகிறது. மேலும் உடற்கூறு பற்றி ஆணின் பார்வையிலிருந்து பெண்ணின் பார்வை மாறுபடுவதற்கான உடலியல் காரணங்களை எவை என்று விளக்குவதாகவும் இவ்வகைத் திறனாய்வு அமைகிறது" என்பர்.[6] பெண்ணின் உடல் உறுப்புகள் பற்றி வருணிக்கும் பான்மையினை இவ்வகையில் அடக்கிக்கூறலாம்.

## மொழி சார்ந்த பெண்ணியம்

ஆண், பெண் இருபாலாருக்கும் பேசும் மொழி பொதுவானது என்றாலும் ஆணுக்குரிய மொழி, பெண்ணுக்குரிய மொழி என்று வேறுபாட்டைக் காணலாம். ஆணுக்குரிய மொழி புறவய மொழியாகவும் பெண்ணிற்குரிய மொழி அகவய மொழியாகவும் அமையும் எனலாம். ஏற்ற இறக்கத்துடன் அமையும் மொழி ஆண், பெண் பாகுபாட்டுடன் விளங்குகிறது. ஆணாதிக்கம் நிறைந்த சமுதாயத்தில் மொழி பொதுவானது என்றால் ஆணிண் மொழியையே பெண் பேச வேண்டியது வரும். அது பெண்ணிய மொழியாகாது. பெண்ணிய மொழி என்றால் ஆணாதிக்கப்பிடியிலிருந்து விடுபட்டு பெண் இயல்பாய் பேசக் கூடியதாய் அகவயமொழியாய் அமைய வேண்டும். எந்த விதச் சமுதாயக் கட்டுபாடும் இன்றி ஒளிவு மறைவில்லாமல் பெண் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படையாக வெளிப்படுத்த அமைகின்ற மொழியே அகவய மொழி என்னும் பெண்ணிய மொழியாகின்றது. பெண்ணின் தனித்தன்மை சார்ந்த செயல்பாடுகள், நிலைப்பாடுகள் முதலியன பெண் மொழியில் அமைவனவாகும். அதாவது பூப்பு, தாய்மை, பெண் உடல், பெண்ணின் பாலியல் தொடர்பான மொழி பெண்ணிய மொழியாக அமைகின்றது.

## உளவியல் சார்ந்த பெண்ணியம்

படைப்பு , படைப்பாளரின் மனம், பால் வேறுபாடு ஆகியவற்றுடன் அமையும் தொடர்பு அடிப்படையில் அமைவது உளவியல் சார்ந்த பெண்ணியமாகும். பெண் குழந்தை மனதில் பதியும் இழப்புணர்வு, மனக்குறை ஆகியன ஆணை

---

5 .மீனாட்சி முருகரத்தனம்,பெண்ணியச் சிந்தனைகள், பக் 121 -150

6 .இரா.சம்பத், பெண்ணிய ஆய்வுகள், 'பெண்பாற்கவிஞர்களின் புதுக்கவிதைகள்' பக். 25 -26

முதன்மையாக்கும் என்ற பிராய்டின் உளவியல் கொள்கையை மறுத்து, உளவியல் ரீதியாக படைப்புகளை அணுகுவது பற்றிக் கூறுவது உளவியல் சார்ந்த பெண்ணியமாகும். அதாவது, "ஒரு பெண் குழந்தை, 'தனக்கு ஆண் பிறப்புறுப்பு இல்லை'. என்ற எதிர்மறையின் மூலமாகத்தான் தன்னை அடையாளம் கண்டு கொள்கிறது ; அதனால் தவிர்க்க முடியாதபடி, அதற்கு ஆணுறுப்பு மேல் உருவாகும் பொறாமை உணர்வினால் (penis envy) துன்புறுகிறது ; அதனால் பிறப்புறுப்பை இழந்த பயச் சிக்கலுக்குள் (Castration Complex -Unconsious fear of losing the genital organs) பெண் சிக்கிக் கொள்கிறாள். இந்தச் சிக்கலின் காரணமாகத்தான் பெண்களே தங்களைக் "குறை உடைய ஆண்"(a man with something missing) எனக் கருதுகின்றனர்". என்ற ஃபிராய்டின் கொள்கையை பெண்ணியல் வாதிகள் ஆணாதிக்கப்பார்வையின் வெளிப்பாடாக கொள்கின்றனர்[7]. இத்தகைய ஃபிராய்டின் உளவியல் கொள்கையை மறுத்து, படைப்புகளை உளவியல் ரீதியாக அணுகும் முறையினை வெளிப்படுத்துவதே உளவியல் சார்ந்த பெண்ணியமாகிறது.

## பண்பாடு சார்ந்த பெண்ணியம்

உடற்கூறு, மொழி, உளவியல் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய பண்பாட்டுச்சூழல் பெண்ணியப் படைப்பில் முதன்மையான இடம் பெறுகிறது. படைப்பாளரின் படைப்பின் தனித்தன்மைகளையும், மற்ற படைப்பாளரிடமிருந்து வேறுபடுதலையும் அறியப் பண்பாட்டுச் சூழல் உதவுகிறது. பெண்ணின் படைப்பைப் பற்றி அறிய இப்பண்பாட்டுச் சூழல் பேருதவி புரிகிறது. ஒருகருத்தை வெளியிடும் போது - பேசும்போது யாரிடம் எப்படி, எப்போது என்பன இன்றியமையாதன. தொல்காப்பியர் வகுத்து வைத்த கூற்று முறைகளே இதற்குச் சான்று. பெண்ணிற்குரிய தனித்த பண்பாடு என்பது இடம் பெற்றிருக்க வேண்டும். பெண்ணிற்குரிய பண்பாடு ஆணாதிக்க சமுதாயத்தால் வரையறுக்கப்பட்டிருப்பதை (பெண் மென்மையானவள்; ஆணின் பாதுகாப்பால் அழகு பெறுபவள்; ஆண் முதன்மையானவன் என்பன) உடைக்க முற்படுவதே பண்பாடு சார்ந்த பெண்ணியம் எனலாம்.

## தமிழ்ப்புதுக்கவிதைகளில் பெண்ணியம்

பெண்ணியக் கோட்பாடுகள் மேலை நாட்டில் தோன்றி வளர்ச்சி பெற்று உலக நாடுகளில் பரவிவருகின்றன. இக்கோட்பாடுகள் படைப்பாளர்களால் பின்பற்றப்பட்டு, அவர்தம் படைப்புகளில் முதன்மையாக்கப்படுகின்றன. தமிழகத்தில் பல்வேறு படைப்பாளர்கள் பல்வேறு தாக்கங்களைக் கொண்டவர்களாகச் செயல்படுகின்றனர். தமிழ்ப்புதுக்கவிதையில் நவீன படைப்பாளர்களிடம் பெண்ணியம் குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்குறிப்பிட்ட கோட்பாடுகள் இடம் பெறுகின்றனவா என்பதைவிட தமிழ்ப்பெண் புதுக்கவிஞர்களின் படைப்புகளில்

---

[7] க.பஞ்சாங்கம் ,பெண்ணெனும் படைப்பு , ப. 21

பெண்ணியச் சிந்தனை எங்ஙனம் இடம் பெற்றிருக்கிறது என்பதையே முதன்மையாகக் காணுகிறது.

## ஆற்றல்

பெண் மென்மையானவள்; அவள் ஆணைக்காட்டிலும் பலவீனமானவள் (weaker sex) என்று பெண்ணைப் பற்றிப் பொதுவாகப் பேசுகின்றனர். இக்கூற்றைப் பெண்ணியலாளர்கள் மறுக்கின்றனர். உறுதியாகச்செயல்படும் பெண்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கும் மிகுதியான ஆற்றல் உண்டு என்று பறைசாற்றுகின்றார்கள், இதனை,

இனிமேலும்
நளன்களையும் துஷ்யந்தர்களையும்
நம்பத் தயாராயில்லை நாங்கள்!
இலட்சுமணர்களுக்கெல்லாம்
ஒரு வேண்டுகோள்
தயவு செய்து
சீதைகளுக்கு யாரும்
கோடு கிழிக்காதீர்கள்
இராவணன் வந்தால் எதிர்க்க
இன்று அவர்களே
தயாராகத்தான் இருக்கிறார்கள்!
மண்ணிலிடும் கோட்டைவிட
மனதிலிடும் கோடுதானே சிறந்தது!

என்ற நிர்மலா சுரேஷின் கவிதை அடிகள் உணர்த்துகின்றன.[8] கோடு கிழித்து கட்டுப்பாடு விதித்துப் பெண்களைப் பாதுகாக்க வேண்டாம். இராவணர் போன்ற துயரங்களை எதிர்க்க ஆற்றல் பெற்றவர்களாகப் பெண்கள் திகழ்கிறார்கள். தீமையை எதிர்க்க மனதில் உறுதி படைத்தவர்களாய் இருக்க ஆண்விதிக்கும் கட்டுப்பாடு தேவையில்லை என்ற கருத்து பெண்ணியச் சிந்தனையாகும். ஆணின் வீரத்திற்கு இணையாகப் பெண்ணின் மன உறுதி எடுத்துரைக்கப்படுகிறது. இவ்விடத்தில் 'கதவடி மிதியினின்று என்னை வேறுபடுத்திக் காட்டும் உணர்வுகள் நான் வெளிப்படுத்தும் போதெல்லாம் என்னைப் பெண்ணியவாதி என்று அழைக்கின்றனர்.' என்ற ரெபேக்கா வெஸ்ட்டின் கருத்து குறிப்பிடத்தக்கது[9].பாதுகாப்பு வளையத்தினுள் இருப்போர் , பாதுகாப்பு வளையம் உடைந்து போகும்போதோ, விலக்கப்படும் போதோதான் எதிர்க்கும் துணிவு கைவரப் பெறுவார்கள். இந்த வகையில் பெண்களுக்குப் பாதுகாப்பு ஆண் இல்லை ; தாங்களே என்ற மனப்பான்மையின் உரத்த குரல் பெண்ணியச் சிந்தனையாக வெளிப்படுகிறது.

---

[8] .நிர்மலா சுரேஷ், நிர்மலா சுரேஷ் கவிதைகள்.ப. 33
[9] .டாக்டர்(திருமதி) ரெஜினா பாப்பா ,இலக்கியத்தில் பெண்ணியச்சிந்தனைகள். ப. I

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (திருக்குறள் -57)

என்ற வள்ளுவரின் குறள் இங்கு நினைக்கத்தக்கது.

இலக்குவன் கோட்டிற்குள் நியாயங்கள் இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அதாவது பெண்ணை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட்டு ஒடுக்கப்படாதிருந்தால் பெண் அக் கோட்டிற்குள் இருக்கலாம். பெண்ணை இழிவு படுத்தும் செயல்கள் இலக்குவன் கோட்டிற்குள் வரையப்பட்டால் கோட்டை அழிப்பதே சிறந்தது. என்ற கருத்தை ,

இலக்குவனின் கோடு போல
பெண்மையைச் சுற்றி
ஒரு கோடு வரையப்பட்டிருக்கிறது
உண்மைதான்
சமுதாயம் வளர்த்த
இலக்குவன் கோட்டில்
நியாயங்கள் மட்டுமே
இருக்குமானால்
இலக்குவன் கோட்டிற்குள்
நிற்பதற்குத் தடையில்லை.
சமுதாயம் தன் வக்கிர எண்ணங்களை
இலக்குவன் கோட்டிற்குள்
வரைந்திருந்தால்
அந்தக் கோட்டை
கிழித்து விட்டு அல்ல
அழித்து விட்டும்
வருவதில்
தவறு இல்லை.

என்ற கவிதை உரைக்கின்றது.[10] கட்டுப்பாடு, பாதுகாப்பு என்ற பெயரில் பெண் அடக்கி, ஒடுக்கப்படுவதை எதிர்க்கும் வகையில் கவிதை அமைகிறது. பெண்ணைத் தாழ்வு படுத்துகின்றபோது' இலக்குவன் கோட்டை அழித்துவிடக் கூடிய போர்க்குரல் பெண்ணியக்குரலாக வெளிப்படுகிறது.

கண்ணுக்கு மை தீட்டுவது மரபு; தீயினைத் தீட்டுவது என்பது புதுமை. 'குட்டக்குட்டக் குனியாதே! நிமிர்ந்து நில்' என்ற கருத்தினடிப்படையில் தீயினைக்கண்ணுக்குத் தீட்டும் புதுமை தோன்றுகிறது.

தோழி!
கண்ணில் நீரெழுதிப்பார்த்தோம்!
ஆணினம்
அதில் நீச்சல் கற்றுக்கொண்டது!
வா! இனி
நெருப்பெழுதிப் பார்ப்போம்!
நெருப்பென்ன,
நமக்குப்புதியதா?
நம் வாழ்க்கை முழுவதுமே

---

10 .சித்ரா ,வெளுக்கப்பார்க்கும் கிழக்கு ப.70

தீ மிதித் திருநாட்கள் தானே!
கண்ணுக்குத் தீயெழுது!
தேன்விழியால் இனித்தால்
எறும்புகளின்
நச்சரிப்பு தாளவில்லை!
மான்விழியாய்ப் பயந்தால்
மருட்டுகிற
அம்பு வந்து பாய்கிறது!
கயல்விழியாய் துள்ளினால்
வலைவீசப் படுகிறது!
வாள்விழிகள், வேள் விழிகள் கூட
வஞ்சக பாணங்களால்
வளைந்தன, சிதைந்தன!
எனவே,
தீ விழியால் மாறிவிடு
தீந்தமிழ்ப்பெண்ணே!
மலராயிருந்தபோது
கசங்கினாய்!
மரத்துப் போயிருந்தும்
பொசுங்கினாய்!
காஷ்மீரத்து ஏரியாய்
நாம் குளிர்ந்திருந்தால்
ஆதிக்கப் படகுவீடு
கட்டிவிடும் ஆண்மை!
இனி,
இரண்டு மதுரைகள்
நமது முகங்களில்!
பாவை விளக்குகள்
கைகளில் அல்ல!
கண்களில்தான்!
கண்ணுக்குத் தீயெழுது!

என்ற குரல் பெண்ணின் போராடும் குணத்தை வெளிக்கொணர முயலுகிறது[11]. அடங்க அடங்க அடக்குபவருக்குக் கொண்டாட்டம். எனவே, ஆணின் கொடுமைகளுக்கு அடிபணிய வேண்டாம்; எதிர்த்து நிற்கவேண்டும் என்ற தன்மையினைப் பெண்ணுக்கு வலியுறுத்துவதாகக் கவிதை அமைகிறது.

---

[11] .மேலது.பக். 36-37

எதிர்த்துப்போராடும் குணம் உடையவர்களாகப் பெண்கள் திகழவேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனை மேற்குறிப்பிட்ட கவிதை அடிகளில் இழையோடுகின்றது. இக் குணம் பெண்ணுக்குத் தேவையான ஒன்று எனலாம்.

## திருமணம்

இரு மனங்களின் கூட்டு இயைவு திருமணம். இவ்வுறவு 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்று பேசப்படும். புரிந்து கொள்ளுதல், விட்டுக்கொடுத்தல் என்ற இரண்டும் சரியாக இருந்தால் மண வாழ்க்கை இனிமையாய் அமையும். இவை சரியாக இல்லாத போதுதான் மணவாழ்க்கை கசந்து போகிறது; மணவிலக்கில் முடிவடைகிறது. மேலை நாட்டுப் பெண்ணியக் கோட்பாடான தீவிரவாதப் பெண்ணியம் திருமண உறவை எதிர்க்கிறது. இதற்கான காரணம் பாலியல் அடக்குமுறை. தமிழ்ப்பெண் புதுக்கவிஞர்கள் இக்கோட்பாட்டை முற்றிலுமாக ஏற்கவில்லை. புரிந்து கொள்ளுதலும் விட்டுக்கொடுத்தலும் உள்ள மண உறவை ஏற்கின்றனர். இவ்விடத்தில் ,

> புரிந்து கொள்ளுதலில்
> தொடங்கி
> மதித்து நடத்தலில்
> வளர்ந்து
> பகிர்ந்து கொள்ளுதலில்
> தொடர்கிற
> பந்தம்தான் இது

என்ற உமா மகேஸ்வரியின் கவிதை திருமண உறவு எப்படி இருக்க வேண்டுமென வரையறுக்கிறது.[12] இவ்வாறில்லாத மண உறவை திருமணத்தைப் பெண்கள் எதிர்க்கின்றனர். 'திருமணம்'என்ற தலைப்பினை கவிஞர் ராணியின் கவிதை,

> இரண்டாம் சிறைச்சாலை
> கூடுதலாய் ஒன்று!
> கட்டில் சுகம் !
> கணவனுக்குத் தேவைப்படும்போது!

என்று திருணத்தை வரையறுக்கின்றது.[13] மணஉறவு மகிழ்ச்சி அளிக்காத நிலையில் சிறையாகிறது. இதற்கான காரணத்தைக் கவிஞர் மறைமுகமாகக் கூறுகிறார். 'கணவனுக்கு தேவைப்படும்போது' என்று கூறுவதிலிருந்து பெண்ணின் விருப்பம் புறக்கணிக்கப்படுவது புலனாகிறது. கணவன்-மனைவி இருவரும் மனமொத்த நிலையில் செயல்படும்போது மணவாழ்க்கை இன்பமாய் அமையும். மனம் ஒத்துப் போகாத நிலையில் மண உறவு சிறைச்சாலை தான். சிறையில் இருக்கும் கைதிகளின் நிலையோடு ஒப்பிட்டு,

---

[12] மீ. உமா மகேஸ்வரி, சுட்டும் விழிச்சுடர் பக். 29-30
[13] ராணி, ஞானவிடியல் ப.6

ஆயுள் கைதிகள்
இருவரின்
அறிமுகப்படலம். . .

என்று கவிஞர் புவனா கூறுகின்றார்[14]. மணமக்கள் ஆயுள் கைதிகளாகின்றனர். கைதிகளுக்கு மனதில் மகிழ்ச்சி இருக்காது. மகிழ்வில்லா மணமக்களுக்குத் திருமணம் தேவையில்லாததாகிறது. இத்தகைய சிறைவாழ்வு ஒரு புறம்; பெண் விடுதலை பெற்று மகிழ்வோடு இருக்கிறாள் என கூக்குரல் மறுபுறம். இதனை,

மணம்
நிச்சயிக்கப்பட்ட
கிராமத்துப் பெண்ணிற்கு
எதிர்பார்ப்பு . . . ஏக்கம்
இன்னொரு சிறை காண !
கதவு திறந்தது
சுதந்திரம் சொல்லி
சிறகை வெட்டி
"விடுதலைப் பெண் "

வீம்பு . . . கிண்டல்
பட்டணங்களில் !

என்ற இளம்பிறையின் கவிதை எடுத்துரைக்கின்றது.[15] 'ஆணுக்கு நிகர் பெண்' என்ற கருத்து ஏற்கப்படாத நிலையில் கிராமப் பெண்ணிற்கு அடுத்த சிறையாக மணவாழ்க்கை அமைகிறது. நகர்ப்பகுதியில் பெண்ணிற்கு முழுமையாகச் சுதந்திரம் அளிக்காத நிலையில் பெண் விடுதலை பெரிதும் பேசப்படுகிறது என்கிறார் கவிஞர். மணவாழ்வு மகிழ்வைத் தரும் என்று எதிர்பார்த்த பெண்கள் , ஏமாற்றத்தில் அழிந்து போவதை ,

நாங்கள்
விட்டில் பூச்சிகள்
ஆகையால்தான்
திருமணம் எனும்
விளக்கில் விழுந்து
எங்களையே நாங்கள்
அழித்துக்கொள்கிறோம். . .

என்று விஜயா வின்சென்ட் குறிப்பிடுகிறார்[16]. மணவாழ்க்கையின்மீது வெறுப்பு ஏன் தோன்றுகிறது? ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளல், ஒருவருக்கொருவர்

---

[14] .கவிஞர் புவனா, மன்னிக்க முடியாத மனிதர்கள். ப.46
[15] .இளம்பிறை, நிசப்தம் .ப.79
[16] .விஜயா வின்சென்ட் ,சூரிய புஷ்பங்கள், ப.10

விட்டுக்கொடுக்கும் அன்பு ஆகியன இல்லாத நிலையில் வெறுப்பு ஏற்படுகிறது. இன்ப துன்பங்களை இருவருமாகப் பங்கிட்டுக் கொள்ளுகின்ற நிலை ஏற்பட்டால் மண உறவு மகிழ்ச்சியாகிறது. இத்தகைய நிலையினைக் கவிஞர் இளம்பிறை வேண்டுகிறார்.

. . .
என்னுடன்
வியர்க்க. . . வியர்க்க
அடுப்பெரிப்பாயா?
விழிநீர் உதிர
வெங்காயம் உரிப்பாயா?
“காபி போடு
சட்டை எடு
தட்டைக் கழுவு”
எடுபிடியின்றி
உன் வேலையை
நீ செய்வாயா?
நடுநிசியில்
அழும் குழந்தைக்காய்
அதட்டி . . . அடித்து
எரிச்சலுடன் எழுப்பி விடாது
தொட்டிலைச் சற்று
இழுத்து விடுவாயா?

என்னை
நீயாக்காமல்
இருப்பாயா . . . நீ . ?
புத்தகம் புரட்டி
கட்டிலில் படுத்து
கண்ணீர் . . . வியர்வை
கலந்து வடிவதை
‘ச் ச் சூ’ யென
அனுதாபங் கொட்டி
இதுதான், மனுஷிகள்
யதார்த்தமென
மேடையில் பேசி
பத்திரிகையில் எழுதும்
இண்டலக்ச்சுவலாய் இல்லாது

கை மாற்றுவாயா?

ஜாலங்காட்டி
போலிக்களிப்பில்
வேலை பெறும் திரிதலன்பு . . . காதலல்ல!

இந்த
யதார்த்தச் சிதைப்பை
' ஏற்பதெனில்
சேர்ந்து ,
துயிலவும்
பயிலவும்
பிரயாணிக்கவும்
விமர்சிக்கவும்
ஆம்.
எனக்கு
அப்படித்தான் ப்ரியம் !

என்பது கவிதைப்பகுதி[17] போலியாக இல்லாமல் சரிசமமாக குடும்பப் பணிகளைப் பங்கிட்டுக் கொள்வதைக் கவிஞர் குறிப்பிடுகிறார். பெண் செய்யும் வேலை ; ஆண் செய்யும் வேலை என்று பாகுபடுத்தாமல் இருவரும் தம்முள் பங்கிட்டுக் கொண்டால் மணவாழ்வு இனிமையாய் அமையும் என்றகருத்து இக் கவிதையில் வலியுறுத் தப்படுகிறது. இக்கருத்து பெண்ணியச் சிந்தனையாளர்களாலும் பெரிதும் பேசப்படுகின்றது. இக்கருத்து மிதவாதப் பெண்ணியக் கோட்பாட்டைச் சேர்ந்ததாகும். உண்மை, அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, புரிதல்கள் இல்லாமல் அடக்குமுறைகள் மட்டும் மணவாழ்வில் இருக்கும் போது திருமணம் வெறுக்கப்படுவதில் தவறில்லை.

## சாடல்

பெண் தூய்மையானவளாய் இருக்கவேண்டும் ; தூய்மையற்றவள்-ஒழுக்கம் குறைந்தவள் எனக்குற்றம் சுமத்தப்பட்டால், ‘தான் தூய்மையானவள்’ என்பதை அவள் மெய்ப்பிக்க வேண்டும் ; அதற்காக எத்தகைய சோதனைகள் இருந்தாலும் அவற்றைக் கடந்து வரவேண்டும். ஆணுக்கு இத்தகைய சூழல் எழாது. அப்படியே தோன்றினாலும் அதைப்பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்த நிலையினைப் பெண் புதுக்கவிதையாளர்கள் கடுமையாக எடுத்துரைத்து விமர்சிக்கின்றனர். சோதனைகள் பெண்ணுக்கு மட்டும் ஏன் இருக்க வேண்டும் என வினவுகின்றனர். அச் சோதனைகளைக் கடந்து வரவேண்டும் என்ற நிலை வந்தால் சோதனைகள்

[17] .இளம்பிறை , மௌனக்கூடு, பக் .16-17

தங்களை மெய்ப்பிப்பதற்கு அன்று; தங்கள் மேலுள்ள கறைகளைப் போக்கிக் கொள்வதற்குத்தான் என்று குரலெழுகிறது. இதனை,

அக்னிப்பிரவேசம்
என் சத்தியத்தை
நிருபிக்கவல்ல,
நீ தொட்ட
கறைகளைக் கழுவ

என்று கவிதை அடிகள் உரைக்கின்றன[18]. தான் குற்றமற்றவள் என்பதற்காக அக்னிப்பிரவேசம் இல்லை ; தன் மீது ஏற்பட்ட அழுக்கினைத் துடைத்துக்கொள்ள அக்னிப்பிரவேசம் என்ற கருத்து அடக்குமுறையின் பிடியிலிருந்து விடுபட நினைக்கும் பெண்ணின் உணர்வாக - பெண்ணிய உணர்வாக இங்கு வெளிப்படுகிறது.

இதே கருத்தை வேறுவிதமாக வெளிப்படுத்துகின்ற வகையில் சரளா ராசகோபாலனின் கவிதை அடிகள்,

கணவனே
மனைவியை நீக்க விரும்பினால்
பெண்ணே , அவனை நீக்கிவிடு

என்று அமைகின்றன[19]. கணவன் மனைவியை விலக்க முற்படுகிறபோது கணவனை, பெண் விலக்கிவிடவேண்டும் என்று குறிப்பிடுகிறது. மலரே முள்ளானால்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையின் இறுதிப்பகுதி இது. கணவன், மனைவியைப் பாதுகாக்கும் நிலையில் உள்ளவன். கணவனே மனைவிக்கு எதிராக மாறும்போது மலர் முள்ளாகும் போது மனைவி கணவனை நீக்குவதில் எந்தவிதத் தவறும் இல்லை என்பதைக் கவிஞர் வெளிப்படுத்துகிறார். ஆண் மட்டுமே முடிவெடுப்பதற்கு உரியவன் என்ற கருத்தை மறுத்து பெண்ணும் முடிவடுப்பதற்கு உரியவள் தான் என்ற புதிய பெண்ணியச் சிந்தனையை உரைப்பதாகக் கவிதை அடிகள் அமைந்திருக் கின்றன எனலாம். சுயசிந்தனை, முடிவெடுக்கும் திறன் உடையவள் பெண் என்ற பெண்ணியக் கருத்தாக்கங்களின் அடிப்படையில் இக்கவிதை அமைகிறது.

பெண்ணியச் சிந்தனையாளர்கள் பெண்ணியக்கோட்பாடுகளை ஏற்றுச்செயல்படுகையில் பல்வேறு விதமான தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். கடுமையான விமர்சனங்கள் எழுகின்றன.

சுதந்திரமாய்ப் பறப்பது
ஆபத்தானதென்று
அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்
அவர்கள்
. . .
புராணங்களும்

---

18 .கனிமொழி கருணாநிதி, கருவறை வாசனை, ப.16
19 சரளா ராசகோபாலன், மேகத்தின் தாகம் ப.50

மதங்களும்
மரபுகளும்
பூட்டிய விலங்குகளை
அறுத்தெறிந்து வாழும்
அணங்குகள் சிலரை
ஆடைகளையே
அவிழ்த்தெறிந்தோரைப்
பார்ப்பது போலன்றோ
பரிகசிக்கிறார்கள்?
சிறகை வளர்த்து -
கூண்டை உடைத்து-
பறக்கப் பழகிய
சில கிளிகளை
சிறை உடைத்துத்
தப்பிய
கொலைக் கைதியென்று
ஆபத்தான பிறவியாய்
அந்நியப் படுத்துகிறார்கள்.

என்ற கவிதை பெண்ணியலாளர் எதிர்கொள்ளும் நிலையினைத் தெற்றெனக் காட்டுகிறது.[20] பெண்ணியச் சிந்தனைகளின் அடிக்கருத்தினை ஏற்காதவர்களின் செயல்பாடு வெளிப்படுகிறது. பயன் தராத மரபுகளை உடைத்து வெளியில் வருவது தவறில்லை. பெண்ணிய சிந்தனை ஆபத்தானதன்று; பெண்ணிற்கு உரிமை தருவது என்ற எண்ணம் எழுந்தால் கவிஞர் கூறுகின்ற நிலை எழாது.

## உணர்வு வெளிப்பாடு

கவிதை வெளிப்பாட்டில் படைப்பாளியின் உணர்வுகள் வெளிப்படும். பெண்ணின் உணர்வுகளை உணர்ந்து கொண்டு ஆண் வெளியிடுவதற்கும் பெண் வெளியிடுவதற்கும் வேறுபாடுகள் உண்டு. பெண்ணின் உணர்வுகளை ஒரு பெண்ணே வெளியிடும்போது பெண்ணின் மொழி புலனாகும். கருத்துப்பாலமாக விளங்கும் மொழி பொதுவாக இருக்க ஆண்மொழி, பெண்மொழி என்ற பாகுபாடு எப்படி என்ற வினா எழலாம். உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையில் ஆண், பெண் சார்ந்த மொழி உறுதியாய் அமையும். பேசுகின்ற மொழி இயல்பாகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபடுவதை அறியலாம். இந்த வகையில் பெண்ணின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதை ,

பெண்ணே உனக்கென்று
தனியிடம் உருவானது இங்கே

---
[20] திலகவதி, அலை புரளும் கரையோரம், பக் 99-100.

'நீ புதிதாய் வயதுக்கு வந்ததற்கு
அல்லது
மாதாந்திர இம்சைகளுக்கு
அல்லது ,
குழந்தை பெற்றதற்கு
அல்லது
புதிய நோய் ஒன்றை எதிர்கொண்டதற்கு
. . .
இந்த நாட்களில்
நீ கிடைத்த நேரமெல்லாம்
தூங்குகிறாய்
அல்லது துன்பப்படுகிறாய்
குறைந்த பட்சம் ஒரு குட்டிப் பிச்சைக்காரி
ஆகிவிடுகிறாய்.
. . .
உதவி செய்ய ஆளில்லாமல்
மாதாந்திரத் தொல்லைகளில்
சமைக்கும் சமையல்
தேவையானது, எல்லோருக்குமாக
இன்னொருமுறை தள்ளிப்போவது
தெரிந்தால்
சந்தோஷம் கொள்ள முகமிருக்குமா?
முகம் கறுத்து
போதும் கலைத்து விடு
என்று சொல்லப் பக்கத்து வீட்டில் கூட
ஆட்கள் இருக்கக்கூடும்
நானோ சமைத்தபின்
தனியிடம் செல்லுவேன்.
அவர்களெதிரே டி.வி.யில்
விளம்பரத்திற்காய் stay freeயுடன்
நடக்கும் , சிரிக்கும்
இளம் பெண்.

என்று அமைகிறது.[21] பெண்களுக்குரிய தனித்த அனுபவங்களை மாதவிலக்கு ,கருவுயிர்ப்பு, stayfree போன்றவற்றினடிப்படையில் எழுகின்ற மன உணர்வுகளை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது. பெண்ணின் இத்தகைய துயரம் பெண்ணின்

---

[21] சுகந்தி சுப்பிரமணியன், புதையுண்ட வாழ்க்கை, பக் 11-12.

அகவய மொழியாக வெளிப்படுகிறது. "ஆணின் கண்ணுக்குப் புலப்படாத, விஷயமே இல்லாத பிரதேசங்கள் பெண் பார்வையில் முக்கியத்துவம் உடையனவாக மாறுகின்றன " என்ற கூற்று மிகப் பொருத்தமானதே.[22] பெண்களின் தனித்தன்மையான அனுபங்களான பிரசவம், கர்ப்பம், வயதுக்கு வந்தமை முதலியன பற்றியும் சுகந்தி சுப்பிரமணியன் தம் கவிதையில் பெண்ணின் உணர்வுகளாகக் காட்சிப்படுத்துகிறார்.

என் குழந்தையின்
தொப்புள் கொடியை
அறுத்தது யார்?
பாட்டியா? நர்ஸா?
நினவில்லை.
என் முதல் கர்ப்பம்
பற்றிய முதல் செய்தியை
யாரிடம் சொன்னேன்?
ஞாபகமில்லை.
. . .
பள்ளி மைதானத்தில்
விளையாடும் போது ருதுவான கணத்தில்
என் கை பிடித்து சந்தோஷம் கொண்ட
முகம் எது?
நினைவில்லை.
. . .
முதல் பிரசவம் குறித்து
பயமுறுத்திச் சொன்னவர் யார்?
மறந்து போனது
பாஷை புரியாத ஊரில்
புது பாஷையில்
முதல் கேட்ட பெண்?
நீள்கிறது நினைவில்லைகள்,
ஏதோ ஒரு வகையில்
எல்லாவற்றிற்கும்
முக்கியத்துவம் இருந்தும்

என்ற கவிதையில் முதல் கர்ப்பம், பிரசவம், ருதுவான சூழல் முதலியன உரைக்கப்படுகின்றது[23] பெண்களுக்குரியனவான அனுபவச் சூழலில் பெண்ணின் உணர்வுகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இவை பெண் சார்ந்த பெண்ணின் தனிப்பட்ட

[22] பெருமாள் முருகன், உதிரக் கவிச்சி படிந்த கவிதைகள். தாமரை ஏப்ரல் 98, ப.37
[23] சுகந்தி சுப்ரமணியன், மு.கு. நூ. பக் 17-18

அனுபவ மொழியாக பெண்மொழியாக – அகவய மொழியாக வெளிப்படுகின்றது. இம்மொழி பெண்ணியக் கோட்பாட்டில் உள்ளடக்கிக் கூறப்படுகிறது.

பெண்ணின் உணர்வுகளை வெளிப்படுத்தும் மாலதியின் கவிதை ஒன்று பெண்ணிய மொழியில் அமைகின்றது.

காரியாலயம் போகும்
காரிகையர் நாங்கள்
கரியர் விமன்
கஞ்சிக்கும் துணிக்கும்
கணவனை எதிர்பார்க்காத
கவிதைப் பெண்கள்
............
காதல் உண்டா வீட்டுக்குள் என்றா
கேட்டீர்கள் ?
காதலா? அது என்ன?
ஓ! அந்தக் கசங்கலா
கால்களிடைப் பிசுக்கா?
உண்டு.
அது கொண்டு தரும்
கடல் போல வேதனை
கண் கீழ் கரு வளையம்
கை கால் நடுக்கம்
கர்ப்பம், கலைப்பு
தன்னைத் தொலைத்துக் கொண்ட
அவமானம்
அத்தனையும் உண்டு

என்பது கவிதைப் பகுதி[24]. பொருளாதாரத்திலிருந்து விடுதலை பெறத் துடிக்கும் பெண்கள் எதிர் கொள்ளும் துயரம் எடுத்துரைக்கப்படுவதுடன் அத்துயரத்தினால் அவர்களின் மன உணர்வுகள் மிகத் துல்லியமாகக் கவிஞரால் பதிவு செய்யப் படுகிறது. விருப்பமற்ற உறவு, அதன் காரணமாய் உருவாகும் கர்ப்பம், கலைப்பு முதலியவற்றில் பெண்ணின் கருத்து ஏற்கப்படாமல் சுயம் இழக்கும் பெண்ணின் மனநிலையைக் கவிதை படம் பிடித்துக் காட்டுகிறது. “பெண்ணின் மனநிலையை ஒளிவு மறைவின்றிக் கூறும் பெண்களே இன்று தேவை”என்ற கூற்று பெண்ணியலாளர் களால் பெரிதும் விரும்பப்படுகிறது[25]. மனநிலையை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகையில் சொற்கள் எந்தவித அலங்காரமும் கொள்ளாமல் அப்பட்டமாகவே அமைகின்றன. பெண்களுக்கு உரியதான கர்ப்பம், கருக் கலைப்பு,

[24] மாலதி ,வரிக்குதிரை, பக்.58-60.
[25] .டாக்டர் ரெஜினா பாப்பா, எந்தன் தோழா அணிந்துரை ப.9

விருப்பமில்லாத, இன்பமில்லாத உறவு முதலியனவற்றைக் கவிஞர் வெளிப்படுத்திய முறை தீவிரவாதப் பெண்ணியம் சார்ந்ததாக அமைகிறது.

சினமுற்ற மனிதனின் கண்கள் சிவக்கும் ; உடல் நரம்புகள் முறுக்கேறும்; தசைகள் துடிக்கும். கண்களே சினத்தை முதலில் அறிவிக்கின்ற உடல் அங்கமாகும். ஒரு பெண்ணின் கோபத்தை எடுத்தியம்புகின்ற பரிமளச் செல்வியின் கவிதை,

என் கண்கள்
ஏன் இப்படிச்
சிவந்தன?
ஓ!
என் கோபம்
பூப்பெய்தி விட்டதா?

என்று அமைகிறது[26].சிவந்த கண்களை பூப்பெய்திய நிகழ்வுடன் ஒப்பிடப்படுகிறது. பெண்ணிற்குரிய பூப்பெய்துதல் நிகழ்வு சிவந்த கண்களைப் பற்றிக் கூறுவதன் மூலம் பெண் சார்ந்த பெண்ணியமொழியாகக் கவிதை அமைகின்றது.

## தனித்திருத்தல்

பெண்ணின் வாழ்க்கையில் சந்திக்கின்ற துயரங்களில் வரதட்சணைக் கொடுமையும் ஒன்று. வரதட்சணைக் கொடுமை வறுமையுடன் சேர்ந்து கொண்டால் பெண்ணின் வாழ்வில் இன்பம் என்ற ஒன்று இராது. வரதட்சணைக் கொடுமை, வறுமை ஆகியன சேர்ந்து கொள்வதால் வெளிப்படுகிற பெண்ணியச் சிந்தனை,

எங்களின் சௌபாக்கியம்
மஞ்சள் பூ மரத்தடியில்
இலுப்பையில் எண்ணெய் உண்டு -
இரைப்பையை நிரப்பிடுவோம்
சொந்தக்கருப்பையைக்
குத்தகைக்கு ஏன் விடணும்?
நாங்கள் கூட்டமாய்க் குரவையிட்டு
கன்னியராய் வீடு செய்வோம்.

என்று அமைகின்றது[27]. வயிற்றுப்பாட்டை எப்படியாவது சரி செய்து கொள்ளலாம் ; திருமணம் செய்து கொண்டு துன்புறுவது எதற்கு? தனியாகவே இருக்கலாம் என்ற கருத்தைக் கவிதை தெள்ளிதின் உரைக்கின்றது. திருமண உறவை வெறுப்பதற்காகக் கவிஞர் "சொந்தக் கருப்பையைக் குத்தகைக்கு ஏன் விடணும்? " என்று வினவுகிறார். இவ் வினா பெண்ணியக் குரலாக ஒலிக்கின்றது. வறுமையில் குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு பலவாறு துன்புறும் வாழ்வை விட்டுத் தனித்திருத்தல்

---

[26] த.நா. பரிமளச் செல்வி ,சுடாத சூரியன்,ப. 24
[27] .இரா. மீனாட்சி ,தீபாவளிப் பகல், ப. 94

சிறந்ததாகும். சொந்தக் கருப்பையைக் குத்தகைக்கு விடாதிருக்கும் நிலை திவீரவாதப் பெண்ணியத்தின் பாற்படும்.

## ஆணும் பெண்ணும் சமம்

'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று மகாகவி பாரதியார் முழக்கமிட்டார். ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் அமைவதை பாரதி போன்றோர் எதிர்த்தனர். குற்றமற்ற நிலையைப் பறைசாற்றி மெய்ப்பிக்க ஏற்படுத்தப்படும் சோதனை ஒருபாற்கோடுதல் கூடாது. இருபாலருக்கும் பொதுவாக அமைதல் வேண்டும். அங்ஙனம் அமையாத நிலையில்,

சீதைக்கு மட்டுமா
அக்கினிப் பரிட்சை?
ராமனே
குற்றவாளியாகும்போது
அவனுக்கு உரிமை ஏது?
தராசுத் தட்டுகள்
சமமாக நிற்கட்டும்!
நீதியின் விழிகளுக்குப்
' பூட்டு எதற்கு?

என்று வினாக்கள் எழுகின்றன. [28] அக்கினிப் பரிட்சை என்ற சோதனை சீதைக்கு மட்டுமன்று; இராமனுக்கும் தான் ! இராமனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகும்போது சீதைக்கு மட்டுமே சோதனை என்று கூற இராமனுக்கு உரிமை இல்லை . பெண் மீது மட்டும் குற்றம் கூற ஆணுக்கு உரிமை இல்லை. இருவருக்கும் சமநீதி வழங்கப்படவேண்டும். பெண்ணுக்கு அநீதி இழைக்கப்படுவதை எதிர்க்கின்ற பெண்ணியக் குரலாகக் கவிஞரின் கவிதை அமைகிறது. இத்தகைய பெண்ணியக்குரலை, தாஜ்னிசா என்ற கவிஞரின் கவிதையிலும் ஒலிப்பதைக் கேட்கலாம்.

கற்பு என்பது
பெண்களுக்கு மட்டும்தான்
என்று சொல்லும்
ஒரு வழிப்பாதையல்ல. . .
இருப்புப் பாதையைப் போல்
இருவருக்கும் சொந்தமே!
குடிநீர் குளத்தை
சேறாக்கிய
எருமை மாட்டை
விட்டுவிட்டு

[28] அனுஷா ரவி, நினைவுப்பூக்கள், ப.31

குளத்தை மட்டும்
குற்றம் சொல்லலாமா?

என்பது கவிதைப் பகுதி.[29] கற்பு என்பது இருபாலாருக்கும் சொந்தம் என்ற பாரதியின்கருத்தினை இக்கவிதை வழி மொழிகின்றது எனலாம். குளத்தைச் சேறாக்கிய எருமையைப் போன்ற ஆணுக்குத் தண்டனை இன்றி குளமாகிய பெண்ணை மட்டும் தண்டிப்பது நியாயமில்லை என்ற பெண்ணியச் சிந்தனையைக் கவிதை வெளிப்படுத்துகிறது. இவ்விடத்தில்

. . . மீண்டும்
சேற்றில் விழும் ஒரு ஆசையினால் அவள்
விட்டு விடுதலை பேசவில்லை இன்றும்
சேற்றில் கிடந்திடும் ஆணைக் கரையேற்றி
ஆணுக்கும் கற்புண்டு என்றிடவே அவள்
'உரிமை' 'சமன்' என்று ஓங்கிப்பேசி, அவள்
ஒழுக்கம் நிலைநாட்டி 'எய்ட்ஸ்' ஓட்டுகின்றாள்
ஒருத்திக்கு ஒருவனைக் காட்டிக்காட்டி கற்பு
பெண்ணுக்குக் கண் என்று சொன்னது போல் இன்று
ஒருவனுக் கொருத்தியைக் காட்டி கற்பு
ஆணுக்கும் கண் என்று சொல்லிடவே பெண்
ஆணுக்கு நிகரென்று பேசுகிறாள் தன்னை
அடிமை என்னும் ஆணை மோதுகின்றாள்.

என்ற மாலதி ஹரீந்திரனின் கவிதை குறிப்பிடத்தக்கது.[30] ஆணும் பெண்ணும் சமமே என்ற மிதவாதப் பெண்ணியக் கோட்பாட்டினை இக்கவிதைகள் விளக்கி உரைக்கின்றன.

ஆண் பெண் சமத்துவமில்லாத நிலையை மாலதியின் கவிதை வேறொரு கோணத்தில் எடுத்துரைக்கின்றது. துன்பங்கள் பெரிதும் பெண்களுக்கு மட்டுமே வருவது ஏன் என வினா தொடுக்கின்றது. பெண்ணின் உடல் அங்கங்களை மரபு ரீதியாக வருணிப்பதினின்று மாறுபட்ட நிலையில் கவிதை அமைகிறது. இதனை,

எரிந்து எரிந்து
சாம்பலானான்
ஒரே ஒரு ஆண்
அவன் சொன்னான்
நான் போதும்
ஆண் இனத்துக்கே
இனி எரிவது எப்போதும்

[29] கே. தாஜுனிசா, கற்பனைக் கவிதையிலே . . ., ப.12
[30] மாலதி ஹரீந்திரன், மாலதி ஹரீந்திரன் கவிதைகள் பக். 26-27

பெண்ணாக இருக்கட்டும்
சொன்னவன்
மன்மதன்
இவளுக்கோ
ஒரு நேர உபயோகத்துக்கு
வகுத்த அவயவங்கள்
ஆயுள் தண்டனை
சிலமாதத் தேவைக்காக
சிலுவையாய் சுமக்கின்ற
வசீகரப்பால் பண்ணை
எரிந்து எரிந்து வாழ்வாள்
வகிடிட்ட இணை மேட்டில்
மடிப்பிட்ட உள் துடையில்
உணர்வெரிக்கும்
விடுபடல் இல்லாமல்
இடுக்குகள் சிக்கலிடும்
இன்னமும் போதாமல்
சாபம்
பின் எப்போதும்

தீ விபத்து எல்லாமே
பெண்ணுக்கு நேர்வானேன்?

என்ற கவிதை குறிப்பிடுகின்றது[31].கவிதையின் தொடக்கம் ஆண் பெண் வேறுபாட்டை மெலிதாகக் கோடிட்டிக் காட்டுவது போல் அமைகிறது. இறுதிப்பகுதி பெண்ணின் உடல் உறுப்புகளை மரபு ரீதியாக வருணிக்கும் தன்மையினின்று மாறுபட்டு அமைந்திருக்கிறது. மாறுபடுவதுடன் மட்டுமல்லாமல் பெண்ணின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பெண்ணிய மொழியாக உருவெடுக்கிறது. சாபம், தீ விபத்து முதலியன பெண்ணுக்கு மட்டுமே நேர்வது ஏன்? என்னும் வினா மூலம் ஆண் பெண்ணை விட உயர்ந்தவனாகக் கருதப்பட்டமை மாறவேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறார் கவிஞர். பெண்மொழி சார்ந்த பெண்ணியச்சிந்தனையின்பால் பட்டதாக இக்கவிதையை வகைப்படுத்தலாம்.

## ஆண் துணை

ஒவ்வோர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள். ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஓர் ஆண் இருப்பான் என்று பேசப்படுவது உலகியல் வழக்கு. ஆண்கள் இல்லாமல் எதனையும் சாதிப்போம்; சரித்திரம்

---

31 .மாலதி, வரிக்குதிரை, பக். 40-41 ,

படைப்போம் என்பது தீவிரவாதப் பெண்ணியம். ஆணுக்கு எதிராகப் பேசப்படுவதன்று பெண்ணியம் என்று கூறுவது மிதவாத, சமதர்மப் பெண்ணியங்கள். ஆணின் துணையோடு பெண் விடுதலை பெறுவதாலேயே, பெண்ணுரிமை மிகச்சிறப்பாக அமையும் என்பதை இந்தியப்பெண்ணியம் எனலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து தான் பெண் விடுதலை பெறமுடியும் என்பதை,

மென்மை என கணக்கு பண்ணிய
பெண்மைக்குள் இத்தனை புயலா?
எனப் பதறி விடாதே
இப்பவும் கூட
உந்தன் துணை இல்லாமல்
எமது விடுதலைப் புயலைக் கடப்பதாய்
உத்தேசமில்லை!
பழைய அழுக்குகள் -அது
உன் மூளையிலும் என் மூளையிலும்
ஏராளம்!
துடைத்தெறிந்துவிட்டு புறப்படுவோம் வா!
நாம் நமக்குள் சண்டையிட்டுக்
கொள்ள வேண்டியவர்கள் அல்ல
நமது இணைந்த கரங்கள் கொண்டு
இவ்வுலகத்தின் போக்கை சரிபார்க்க வேண்டியுள்ளது!
அதற்கு முன்
என் கரங்களின் மீது
உன் கால்கள் இருந்தால் -
கொஞ்சம் நகர்த்திக் கொள்ளேன்!

என்ற கவிதை அடிகள் குறிப்பிடுகின்றன.[32] பெண்ணால் மட்டுமே பெண் விடுதலை அமையாது. மக்கள் தொகையில் சரிபாதி நிலையில் உள்ள பெண்களுக்கு விடுதலை அமைய ஆண்களும் துணை புரியவேண்டும் என்ற கருத்து இந்தியப் பெண்ணியம் சார்ந்தது எனலாம். மிதவாத, சமதர்மப் பெண்ணியக் கருத்துடன் சிறிய மாற்றம் உடையதாய் இந்தியப் பெண்ணியம் அமைகிறது. இந்தியச் சூழலுக்கேற்ப ஆண் - பெண் சமத்துவம், இல்லப்பணிகளை ஆணும் பெண்ணும் பகிர்ந்து கொள்வது என்ற கருத்துடன் பெண்ணியச் சிந்தனை அமைவதும் இந்தியப்பெண்ணியமாகும் . இவ்வகையில் ஆணை முழுமையாக எதிர்க்காமல் ஆணின் துணையோடு பெண் விடுதலை காண முற்படுகிற சுபத்ராவின் கவிதை இந்தியப் பெண்ணியக் கவிதை என்று கூறலாம்.

---

[32] .சுபத்ரா, எந்தன் தோழா. ப.19

பெண்ணினத்தின் அடிமைத்தளை அகற்ற முனைப்புடன் போராடுகின்ற ஆணின் துணை பெண்ணுக்குத் தேவை. இத்தகு எண்ணங்கொண்ட ஆணுடன் சேர்ந்தே பெண் விடுதலை அமையும் என்பதனை,

மானுடம் பற்றிப்
பேசமுற்பட்ட பிறகு - நீ
சாடுவது ஏன் தோழி
ஆண்களை மட்டும் !
அவர்களில்லாமலும் சமுதாயமா?
விடியலைத் தேடும் முயற்சியில்
தீவிரமாய்
இறங்கிவிட்டு
வைகறையைத் தவிர்க்கலாமா?
என்னோடு சேர்ந்து நீ
சமுதாய மாற்றம் பெற
சபதமெடுத்திருப்பது
சத்யமென்றால்
நண்பனடி
அவன் நமக்கு !
. . .
வா! இவன் போன்ற
நண்பர்களோடு
கரம் சேர்த்தே நாம்
போராடலில் இறங்குவோம்.

என்று பாரதி கண்ணம்மா தம் கவிதையில் குறிப்பிடுகிறார்.[33] பெண்ணியம் முழுக்க முழுக்க ஆணை எதிர்ப்பதில்லை. ஆண் இல்லாமல் பெண் விடுதலை அமைவதில்லை என்ற இந்தியப் பெண்ணியக் கவிதையாக இக்கவிதை அமைகின்றது.

ஆணைத் துணையாகச் சேர்த்துக்கொண்டு அமைகின்ற போராட்டத்தில் ஆண் எப்படி இயங்க வேண்டும் என்பதைத் தேவகி என்ற பெண் கவிஞர் குறிப்பிடுகிறார். ‘தான் ஆண் ’ என்ற தன் முனைப்பு நீங்கிய ஆணாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பெண்ணும் தன்னிடம் உள்ள தன் முனைப்பு நீங்கியவளாக இருப்பாள். இத்தகைய கருத்தினை,

உனக்கு உன்னைப்
பார்த்து
உனக்குள் உன்னைத்

---

[33] .பாரதி கண்ணம்மா, பாரதி கண்ணம்மா கவிதைகள், ப.42

தெரிந்தால்
உனக்கு என்னைப்
பார்க்கவும்
எனக்குள் என்னையும்
தெரியும்
உனக்கு உன் மதிப்பு
உள்ளபடி
புரிந்தால்
உனக்கு என் மதிப்பும்
உள்ளபடி
புரியும்
உனக்கு என்னோடு
உன் 'நான்' தள்ளி
வாழ முடிந்தால்
எனக்கும் உன்னோடு
என் நான் எடுத்து
வாழ முடியும்

என்ற கவிதை வெளிப்படுத்துகிறது.[34] தன் முனைப்பாகிய நான் என்பது மனிதர்களிடம் கலந்துறவாடும் தீமைகளுள் ஒன்று. 'நான் 'என்பது ஒழிந்தால்தான் மனிதனுக்கும், அவன் சார்ந்த சமுதாயத்திற்கும் நற்பயன் விளையும். பெண்ணின் விடுதலைக்காக முனைவோரிடம் 'நான்' ஒழிவது மிக இன்றியமையாதது. ஆணும் பெண்ணும் இணைந்து போராடுகின்ற பொழுது அவர்களுக்கிடையே 'நான்' என்ற தன்முனைப்பு நீங்கினால் போராடும் தன்மை சிறப்படையும் வெற்றியும் கிட்டும். குறிக்கோளும் செயல்முறையும் இணைந்து சென்று பயன் கிட்டும்.

## மரபை உடைத்தல்

ஆணுக்குப் பெண் அடிமை ; ஆணுக்காகவே பெண் படைக்கப்பட்டிருப்பவள்; ஆணுடைய கருத்தே பெண்ணுடையது ; கற்பென்பது பெண்ணுக்கு மட்டுமே உரியது என்ற கருத்துக்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட பிழை மரபு. இம் மரபு பெண்ணை இரண்டாந்தர குடிமகளாகவே கருதுகிறது. இத்தகைய மரபுவழுவை உடைக்கும் விதத்தில் பெண் கவிஞர்களின் குரல்கள் எழாமலில்லை.

கற்புக்காய் கண்ணீர் வடிக்க
நான் ஒன்றும் கண்ணகியல்ல
மானத்தை நினைத்து நிற்க,
நான் ஒன்றும்
இழக்கவில்லை.

---

[34] .தேவகி, உன் தோழமையின் இருப்பில் , பக் 91-92

தற்கொலையில் உயிரைமாய்க்க
நான் ஒன்றும் கோழையல்ல
.. . .
எனது பாதங்கள் தொடரும் பயணத்தில்
முடிந்தால் . . . துணி விருந்தால்
'உண்மையிலும் உண்மையாக
எவராவது வாழ வரலாம்.

என்ற குரல், மரபை உடைக்கின்ற வகையில் எழுகிறது[35]. போர்ச்சூழலில் பெண் பலவந்தப் படுத்தப்பட்ட நிலையில் சமுதாயம் அவளைக் கற்பிழந்தவளாகப் பார்க்கிறது. மானம் இழந்தவளாக நினைக்கிறது. நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். இனி நடக்கப்போவது எப்படி என்ற நிலையில் துணிச்சலுடன் இழந்தது ஒன்றுமில்லை என நிலைத்து நிற்கும் எண்ணங்கொண்ட பெண்ணை வெளிக்காட்டுவதாகக் கவிதை அமைகிறது. துணிச்சலான பெண் தன்னுடன் வாழத்துணிவுள்ளவர்கள் வரலாம் என அழைப்பு விடுக்கிறாள். விருப்பமின்றி பலவந்தப்படுத்தப்பட்ட அபலைப்பெண் சமுதாயத்தால் இழித்தும், ஏசியும், பழித்தும் அவமானப்படுத்தபட்ட நிலையில்- பண்பாட்டுச் சூழலில் மரபை உடைக்கும் விதமாக இக்கவிதை அமைந்திருக்கிறது.

பெண்ணை நுகர்வுப்பொருளாகப் பார்க்கும் போக்கு ஆணாதிக்கச் சமுதாயத்தில் நிலவுகிறது. அழகுபடுத்துவது பெண்ணுக்காக அன்று. ஆணுக்காக - கணவனுக்காக என்று கூறப்படுகிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை பெண்ணின் அணிகலன்களாகப் பேசப்படுகின்றன. பெண்ணை நுகர்வுப் பொருளாகப் பார்க்க உதவுகின்ற அழகுபடுத்தலைப் பெண்ணியச் சிந்தனையாளர்கள் எதிர்க்கின்றனர். இத்தகைய எதிர்ப்பு,

என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவார
கண்ணாடி தேடுகிறீர்?

சேலைகளைச் சரிப்படுத்தியே
வேளைகள் வீணாகின்றன
வேண்டாம் தோழிகளே
வேண்டாம் . . . . . .
ஆடையின் மடிப்புகள்
அழகாக இல்லை என்பதற்காக
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம் . . . . . .
சரிகைச் சேலைக்கும்

---
35 .ரங்கா, சொல்லாத சேதிகள், பக் 34-35.

கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள் !
அந்த வெட்கம் கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்து விடுவோம்.

என்று வெளிப்படுகிறது[36].அழகுக்கோலம் புனைவது ஆண்களுக்காக என்ற கருத்தியலைக் கடுமையாகச் சாடுகிறது கவிதை. பெண்ணியலாளர்களும் இக்கருத்தை ஏற்கின்றனர். பண்பாடு என்ற பெயரில் பெண் இழித்துரைக்கப்படுவதை எதிர்த்துப் பேசுவதால் பண்பாட்டுச் சூழலடிப்படையிலான பெண்ணியக் கவிதையாக இக்கவிதையைச் சுட்டி உரைக்கலாம்.

நுகர்வுப் பொருளாக இல்லாமல் எதனையும் வெற்றி கொள்ளத் துடிக்கின்ற பெண்களை இரா. ஆனந்தி இனங்காட்டுகின்றார். துணிவுடையவர்களாகவும், சிந்திக்கத் தெரிந்தவர்களாகவும் பெண்கள் விளங்குவதாகக் கவிஞர் பறைசாற்றுவது பெண்ணியச் சிந்தனையை புலப்படுத்துவதாகும். இதனை,

ஆடல் - பாடல்களுக்கு
ஆட்படுவதும்
அலங்காரங்களுக்கு
அடிமைப்படுவதும்
இனி
நாங்கள் அல்ல !
கோடிப் பிரளயத்தை
தேகத்தில் தேக்கி
நெஞ்சத்தில் மட்டும்
பஞ்சாக்னி வளர்க்கும்
வேக யுகப் புயல் !
சிந்திக்கத் தெரிந்ததால்
எதையும் சந்திக்கத்
தயங்காதவர்கள்.
எதிர்வரும்
தீமைகளுக்கு எதிரான
நெருப்புக் கோளங்கள்
வரும் உதயங்களில்
விடியலுக்காக ஏங்குபவர்கள்
நாங்கள் அல்ல .

[36]சன்மார்க்கா, சொல்லாத சேதிகள், பக். 24-25

இனி -

விடியலே எம் விழிகளில் தான் !

என்ற கவிதை குறிப்பிடுகின்றது.[37] ஆணாதிக்கச் சமுதாயம் உருவாக்கி வைத்த பெண்ணை இழிவு படுத்தும் கருத்தாக்கங்கங்களை முற்றிலும் எதிர்ப்பதாக இக்கவிதை அமைகிறது. பெண்கள் அழகுபடுத்தும் பதுமையா் ; சிந்திக்க இயலாதவா்கள் ; அடிமையாக இருந்து விடியலுக்காக ஏங்குபவா்கள் என்ற மரபுக்கருத்தை உடைக்கும் பண்பாடு சார்ந்த பெண்ணியக் கருத்தினைக் கவிதை எடுத்தியம்புகின்றது.

## எதிர்ப்பு

பெண்ணியச் சிந்தனை நாடு, இனம், மொழி, எல்லை ஆகிய வேறுபாடுகளில் வெவ்வேறாக வெளிப்படுகிறது என்பதை இவ்வியலின் முன்பகுதி உரைக்கின்றது. இதன் விளைவாகப் பல்வேறு பெண்ணியக் கோட்பாடுகளைச் சுட்டலாம். பெண்ணியச் சிந்தனையாளர்களால் பெரிதும் போற்றப்படுகிற பெண்ணியக்கோட்பாடு சார்ந்த கவிதைகளுக்கிடையே பெண்ணியச் சிந்தனையை விமா்சிக்கின்ற கவிதைகளும் சில பெண் புதுக் கவிதையாளா்களால் படைக்கப்பட்டிருக்கின்றன.

பாலியல் சுதந்திரங்களால்

குடும்ப நிறுவனம்

கேலிக்கூத்தாய்

என்ற மாலதி ஹரீந்திரனின் கவிதை பெண்ணியக் கோட்பாடு ஒன்றை விமா்சிக்கின்றது.[38] தீவிரவாதப் பெண்ணியம் பெண்களுக்கு எதிரான பாலியல் ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதுடன் குடும்பம் என்ற அமைப்பையும் உடைக்க முற்படுகிறது. பாலியல் ஒடுக்குமுறை, குடும்பம் முதலாக வளர்ந்து வரும் என்பதை முழுமையாக ஏற்பதால் குடும்பம் என்னும் நிறுவனம் சிதைக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரவாதப்பெண்ணியம் உறுதியாக நிற்கின்றது. குடும்ப அமைப்பு மேனாடுகளில் சிதைவுற்ற அமைப்பாகும். இந்தியாவில் குடும்பம் என்ற கட்டமைப்பு மிக உறுதியாக இயங்குகிறது. மேனாட்டுக்கோட்பாட்டின் தாக்கமான தீவிரவாதப்பெண்ணியம் பரவலாக இங்கு ஏற்கப்படவில்லை. இந்நிலையில் மாலதி ஹரீந்திரனின் கவிதை தீவரவாதப் பெண்ணியத்தை எதிர்ப்பதாக அமைகிறது. குடும்ப நிறுவனம் கட்டிக்காக்கப்படவேண்டும் என்பதையும் கவிஞா் மிகத் தெளிவாக உணா்த்துகிறார்.

## தொகுப்புரை

மேனாட்டு இலக்கியக் கோட்பாட்டு வகைகளுள் ஒன்று பெண்ணியக் கோட்பாடு இக் கோட்பாடு படைப்பாளிகளைப் பெரிதும் தாக்கங்களுக்கு உட்படுத்தி இருக்கின்றது. புதுக்கவிதையாளா்களில் பெண் கவிஞா்களின் படைப்புகளிலும்

---

[37] இரா. ஆனந்தி ,உலகை ஒரு பூவாக்கி . . . பக் . 9 -10
[38] மாலதி ஹரீந்திரன், மாலதி ஹரீந்திரன் ஹைக்கூ கவிதைகள் ப. 52

பெண்ணியக் கோட்பாட்டின் தாக்கத்தைக் காணலாம். தமிழ்ப்பெண் புதுக்கவிஞர்களின் படைப்புகளில் மிதவாதப் பெண்ணியம் , சமதர்மப் பெண்ணியம், இந்தியப்பெண்ணியம், பெண்மொழி சார்ந்த பெண்ணியம் உடலமைப்பு சார்ந்த பெண்ணியம், பண்பாடு சார்ந்த பெண்ணியம் ஆகிய கோட்பாட்டுச் சிந்தனைகள் இடம் பெறுகின்றன. ஆய்வு எல்லைக்குள் உட்பட்ட படைப்புகளில் தீவிரவாதப் பெண்ணியம் இடம் பெறவில்லை. மாறாக எதிர்ப்புக்குரல் எழுப்புகிற கவிதை இடம் பெற்றிருக்கின்றது. பெண்ணிய உளவியல் நோக்குத் திறனாய்வின் அடிப்படையிலும் கவிதை காணப்படவில்லை. இந்திய நாட்டின் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப பெண்ணியக் கருத்து பெண் கவிஞர்களின் படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. சில மரபுகளை உடைக்கும் வகையிலான கருத்துகள் கவிதையில் வெளிப்பட்டாலும் அஃது இந்தியப் பண்பாட்டை முற்றிலும் சிதைப்பதாகவோ முழுமையாக எதிர்ப்பதாகவோ அமையவில்லை.